சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10-ம் நாள் செவ்வாய்கிழமை

இடைமனு எண்.6/2025.

இன்

அசல் வழக்கு எண்.319 /2017

....

விஜயா .. மனுதாரர்/வாதி

..எதிர்..

மாணிக்கம் ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 30.01.2026-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.சி.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.சி.ரமணிதுரை அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**<u>உத்தரவு</u>**

சிவகங்கை ஊராட்சி ஒன்றிய கூடுதல் வட்டாரவளர்ச்சி அலுவலர் அவர்களை வாதி தரப்பு சாட்சியாக விசாரிப்பதற்கு அனுமதி வழங்கும்படி உத்தரவு செய்ய வேண்டி மனுதாரர் தரப்பில் கட்டளை 16 விதி 1 மற்றும் பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

அசல் வழக்கிலும் வாதி தரப்பு சாட்சிக்காக இன்று வாய்தா உள்ளது. தாவா சொத்தில் ஜீவன்தாரா கிணறு சம்மந்தமாக வாதி பெயரில் கிணறு அமைக்க சிவகங்கை ஊராட்சி ஒன்றிய கூடுதல் வட்டாரவளர்ச்சி அலுவலரால் கடந்த 19.01.1995-ம் ஆண்டு ந.க.பி1/2551/94-4 என்ற கோப்புகள் அடிப்படையில் உத்தரவு ஏற்பட்டது. மேற்படி உத்தரவு சம்மந்தமான கோப்புகள் வாதி தரப்பு வழக்கை நிரூபிக்க

வேண்டிய நிலையில் அவசியமான ஆவணங்களாக உள்ளது. எனவே தாவா சொத்தில் சிவகங்கை ஊராட்சி ஒன்றிய கூடுதல் வட்டாரவளர்ச்சி அலுவலர் அவர்களையும் வாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க அனுமதி வழங்கி உத்தரவு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. இல்லாவிடில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும். இதனால் எதிர்மனுதாரருக்கு யாதொரு இழப்பு ஏற்பட போவதில்லை. எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிட வேண்டும்.

<u>3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்-</u>

தாவா மனுவானது அசல் வழக்கின் விசாரணையை காலதாமதப் படுத்துவதற்கும் அதன் மூலம் எதிர்மனுதாரருக்கு தொந்தரவு கொடுப்பதற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மோசடியாக மனுதாரர் பட்டா பெற்றுள்ளார் என்றும், சிவகங்கை அரசு அலுவலர்களை தனது செல்வாக்கை பயன்படுத்தி கிணறு தோண்டுவதற்கு உத்தரவு பெற்றுள்ளார் என்றும், ஜீவந்தாரா scheme அடிப்படையில் கிணறு எதுவும் மனுதாரர் தோண்டவில்லை என்றும், தாவா சொத்திலுள்ள கிணறானது வாதியின் சொந்த பணத்தைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டது என்றும், 30 வருடங்களுக்கு முன்பு உள்ள விஷயம் குறித்து அழைப்பாணையின் பேரில் சாட்சியை அழைத்து விசாரிப்பது வாதிக்கு இழப்பிட முடியாத தொந்தரவை அளிக்கக்கூடியது என்றும் தாவா மனு அவசியமற்ற மனு என்றும் எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புக்கள் பார்வையிடப்பட்டன.

**6**. சிவகங்கை ஊராட்சி ஒன்றிய கூடுதல் வட்டாரவளர்ச்சி அலுவலர் அவர்களை வாதி தரப்பு சாட்சியாக விசாரிப்பதற்கு அனுமதி வழங்கக்கோரி மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம்

மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தனது வழக்கினை நிரூபணம் செய்ய சிவகங்கை ஊராட்சி ஒன்றிய கூடுதல் வட்டாரவளர்ச்சி அலுவலர் அவர்களை விசாரணை செய்யக்கோரும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ள நிலையிலும் அசல் வழக்கின் தீர்வானது இருதரப்பு விசாரணைக்கு பின்பு முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால் மனுதாரரின் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்பும் கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடுவதாக மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். ஆகவே வழக்கின் சங்கதிகளை கருத்தில் கொண்டு அசல் வழக்கில் சிவகங்கை ஊராட்சி ஒன்றிய கூடுதல் வட்டாரவளர்ச்சி அலுவலர் அவர்களை விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக தாவா மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2026.02.10 14:43:58 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2026.02.10 14:44:03 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court
Sivagangai
I.A.No.6/2025 in
O.S.No.319/2017
in
**Draft/Fair/Order**
10.02.2026